கோபால்பட்டியில் 525 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகளும் செயல்பட்டு வருகின்றன. தேவைப்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

படகுக் குழாம்

***48484—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை ஆழியாறு ஆற்றில் சுற்றுலாத் துறைமூலம் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். குடிமராமத்து நாயகர், காவேரி காப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை ஆழியாறு ஆற்றில் சுற்றுலாத் துறைமூலம் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள் வினவியிருக்கின்றார்கள். அழகிய இயற்கைக் காட்சிகள் கொண்ட மலைகளால் சூழப்பட்ட அணையாக ஆழியாறு

2020 மார்ச் 11]

அணை அமைந்துள்ளது. பொள்ளாச்சி மற்றும் வால்பாறைக்கு இடையில் அமைந்துள்ள இந்த நீர்த்தேக்கம் கோயம்புத்தூரிலிருந்து 64 கிலோ மீட்டர் தொலைவிலும், பொள்ளாச்சியிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. ஆழியாறு அணை பொதுப் பணித் துறையின் நீர் வள ஆதாரத் துறைமூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஆழியாறு அணையில் உள்ள தண்ணீர் குடிநீராகவும், பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், ஆழியாறு அணை பாதுகாப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதியும் சுற்றுலாத் துறையின்மூலம் உல்லாசப் படகு சவாரி செய்வதற்கு ஏதுவாக படகுக் குழாம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்களின் துயரை உணர்ந்து, நல்ல பல திட்டங்களைத் தந்து, கழகத்தின் காவியத் திலகமாய்த் திகழ்ந்திட்ட எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களை வணங்கி அரும்பணி செய்யும் இரும்பு தேசத்து கரும்பு மனிதர், கழகத்தின் இணை ஒருக்கிணைப்பாளராய் அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து கட்டுப்பாட்டோடு வழிநடத்தும் எங்கள் இணையில்லா முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், என்றும் முதல்வருக்கு துணையாகவும், மகளிர் தின விழாவில் தலைமையேற்று எங்களுக்கு சிறப்புச் சேர்த்த துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், கோவை மாவட்டத்திற்கு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து, தமிழ்நாட்டிலேயே சிறந்த மாவட்டமாக கோவை மாவட்டத்தை உருவாக்கிக் கொடுத்துள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்கள் அருமைச் சகோதரர் எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஆற்றின் மேற்பகுதியில், வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை, ஓடையகுளம் பேரூராட்சிகள் மற்றும் பெத்தநாயக்கனூர்,

சோமந்துறைசித்தூர் ஊராட்சிகளின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ளன. அவ்வாற்றின் கீழ்ப்பகுதியில் ஆகாயத் தாமரை அதிகமாக வளருகின்றது. அங்கு படகுக் குழாம் அமைத்தால், ஆகாயத் தாமரை வளராது; சுற்றுலாப் பயணிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்; ஆனைமலை பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கவும் வசதியாக இருக்கும். எனவே, ஆனைமலை ஆற்றில் படகுக் குழாம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகிய இயற்கைக் காட்சிகள் கொண்ட, மலைகளால் சூழப்பட்ட அணையாக ஆழியாறு அணை அமைந்துள்ளது. பொள்ளாச்சி மற்றும் வால்பாறைக்கு இடையே அமைந்துள்ள இந்நீர்த்தேக்கம், கோயம்புத்தூரிலிருந்து 64 கி.மீ. தொலைவிலும், பொள்ளாச்சியிலிருந்து 24 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. ஆழியாறு அணை, பொதுப் பணித் துறை, நீர் வள ஆதாரத் துறை ஆகியவற்றின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆழியாறு அணையிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் செல்லும் ஆழியாறு ஆற்றில் உல்லாசப் படகு சவாரி செய்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறை, நீர் வள ஆதாரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, ஆய்வு செய்து, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இருப்பின், படகுக் குழாம் அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, வால்பாறையின் மேல் பகுதியில் அமைந்துள்ள சோலையாறு அணைப் பகுதி*

2020 மார்ச் 11]

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்ற பகுதியாகும். எனவே, அங்கே சுற்றுலாத் துறையின்மூலம் ஒரு பூங்கா அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோலையாறு பகுதியில் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் உரிய கருத்துருவினைப் பெற்று, சுற்றுலாத் துறையின் மூலம் நிதி ஒப்பளிப்பு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

பேருந்து வசதி

***26101—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்திலிருந்து களியக்காவிளை மற்றும் திருவனந்தபுரம் வழியாக *எர்ணாகுளத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) *கன்னியாகுமரியிலிருந்து எர்ணாகுளம் (வழி) நாகர்கோவில், மார்த்தாண்டம், களியக்காவிளை, திருவனந்தபுரம்*